**DEPOSITION OF WITNESS**
***(Chapter XXIII Code of Criminal Procedure)***
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | **STC** 1129 **of** 2023 | **Date** | : | 06.11.2025 |
| **Deposition of Witness for** | : | எ.சா.1 | **Taluk** | : | |
| **Name** | : | ஹரிஹரன் | **Calling** | : | |
| **Father's Name** | : | தண்டபாணி | **Religion** | : | |
| **Village** | : | | **Age** | : | |

**Solemnly affirmed is accordance with the Provisions of Act X of** 1873 **on the day of** 06.11.2025.

**(புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜர் )**

**புகார்தாரர் தரப்பில் DW1 குறுக்கு விசாரணை:**

1. நான் இவ்வழக்கில் இரண்டாவது எதிரி ஆவேன். ஸ்ரீ விநாயகா பேப்ரிக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஆவேன். நான் ITI படித்துள்ளேன். புகார்தாரரை எனக்கு கடந்த 7 வருடங்களாக தெரியும். புகார்தாரர் நூல் தொழில் செய்து வருகிறார். புகார்தாரர் வசதியானவர் என்று சொன்னால் சரிதான். நான் புகார்தாரரிடம் 7 வருடங்களாக நூல் வியாபாரம் செய்து வருகிறேன். நான் புகார்தாரரிடம் இருந்து நூலை விலைக்கு வாங்குவேன், அதற்குண்டான பணத்தை அவ்வப்போதே செலுத்தி விடுவேன்.

2. நான் கடைசியாக புகார்தாரரிடம் 2021ம் வருடம் நூல் வாங்கினேன், தேதி, நாள் ஞாபகமில்லை. அதற்கு பின்னிட்டு நான் புகார்தாரரிடம் நூல் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். நூல் வாங்கும்போது

புகார்தாரர் பில் கொடுப்பார் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன பில்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு காசோலைகளான வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான காசோலைகளில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்சொன்ன வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான காசோலைகள் 1ம் எதிரியான எனது நிறுவனத்துடையது ஆகும்.

3. நான் புகார்தாரருக்கு ரூ.4,00,000/– பணம் அளிக்க வேண்டி இருந்த காரணத்தினால் வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான காசோலைகளை அவரிடம் அளித்தேன் என்று சொன்னால் சரிதான், நான் பணத்தை திருப்பி செலுத்தி விட்டேன். தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் மூலம் ரூ.1,50,000/–த்தை புகார்தாரருக்கு திரும்ப செலுத்திவிட்டேன் என்று நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அதற்குண்டான அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சமர்பித்துள்ளேன். மேற்சொன்ன ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பித்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதாக புகார்தாரர் கூறுகிறார் என்று சொன்னால் சரியல்ல.

4. நான் கரூர் வைஸ்யா வங்கியின் மூலம் ரூ.94,000/–த்தை புகார்தாரருக்கு phonepay மூலம் திரும்ப செலுத்திவிட்டேன் என்று நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அதற்குண்டான அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சமர்பித்துள்ளேன். மேற்சொன்ன ஆவணங்களை நீதிமன்றத்தில்

சமர்பித்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதாக புகார்தாரர் கூறுகிறார் என்று சொன்னால் சரியல்ல.

5. நான் ரூ.78,000/−த்தை புகார்தாரரிடம் எந்த தேதி, மாதம், வருடம், எந்த இடத்தில் வைத்து திருப்பி கொடுத்தேன் என்று எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் ரூ.78,000/−த்தை டேமேஜ் நூலுக்காக கழிப்பதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரத்தை ஊர்சிதப்படுத்தும் வகையில் இந்நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் புகார்தாரருக்கு ரூ.4,00,000/−த்தை திருப்பி தரவில்லை என்று புகார்தாரர் கூறுகிறார் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு நான் திருப்பி அளித்ததாக கூறும் பணத்திற்கு எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. நான் புகார்தாரருக்கு தொழில் செய்வதற்காக பணம் கொடுத்ததாக இருந்ததால் எந்த தேதியில், மாதத்தில், வருடத்தில் பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் கூறியிருப்பேன் என்றும் அவ்வாறு கூறாத காரணத்தினால் நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 16.04.2023ம் தேதி புகார்தாரரிடம் கைமாற்று கடனாக ரூ.4,00,000/− வாங்கி கொண்டு அதை திருப்பி செலுத்துவதற்காக புகார்தாரரிடம் வழக்கு காசோலைகளை அளித்துவிட்டு, தற்போது தொழில் செக்யூரிட்டிக்காக அளித்தேன் என்று பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. புகார்தாரர் அளித்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அளித்தேனா என்றால் இல்லை. மேற்சொன்ன நான்கு வழக்கு காசோலைகளை புகார்தாரரிடம் இருந்து திருப்பி தருமாறு சட்டப்படி நடவடிக்கையோ அல்லது காவல் துறையிடம் மனுவோ கொடுத்தேனா என்று சொன்னால் இல்லை, நான் புகார்தாரரிடம் மேற்சொன்ன காசோலைகளை கேட்டபோதிலும், அவர் பின்பு தருவதாக கூறினார். மேற்சொன்ன வழக்கு காசோலைகளுக்கு வங்கியின் மூலம் stop payment செய்யக்கோரி எனது வங்கிக்கு நான் தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் புகார்தாரரிடம் மேற்சொன்ன காசோலைகளை திருப்பி தரக்கோரியதாக அளித்துள்ள சாட்சியம் பொய் என்று சொன்னால் சரியல்ல.

8. உண்மையிலேயே வியாபார ரீதியாக நான் நூல் வாங்கியதில் பணம் பாக்கி வைத்திருந்தால் பணம் வரவு செலவு கணக்கையும் நான் திருப்பி செலுத்தியதாக சொல்லப்படும் பணத்தின் அசல் ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் கடந்த 16.04.2023 ம் தேதி நான் புகார்தாரரிடம் கைமாற்று கடனாக ரூ.4,00,000/– வாங்கி கொண்டு தற்போது தொழில் ரீதியாக கொடுக்கப்பட்ட செக்யூரிட்டி காசோலை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. புகார்தாரரை நான் ஏமாற்றும் எண்ணம் கொண்டு account closed செய்த வங்கியின் காசோலைகளை அவரிடம் அளித்துள்ளேன் என்றும் அதனால் நான் புகார்தாரருக்கு ரூ.4,00,000/– திருப்பி அளிக்க சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன

தேதியில், மாதத்தில், வருடத்தில் எந்த தொழில் பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றும் இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

Witness – Sd/- Hariharan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.